[illegible]
[illegible]
[illegible]

†

சேசுமரியாயி சூசை துணை.



வேளாங்கண்ணி
அர்ச். ஆரோக்கிய மாதாவின்
திருவிழாச்சிறப்பு.

கும்மியும், பண்விருத்தமும்.

இவை

எனது தோழர்கள்! சென்னை சிந்தாதிரிப்பேட்டை
அர்ச். சல்லாசர் பஜனை ஸ்தாபகர்
ஜோ. இலாசர் பிள்ளை
புட்டிவியாபாரி சி. பொன்னுசாமி பிள்ளை
பட்டன்வியாபாரி V. ஞானம் பிள்ளை
எனது ஞானகுமாரன்
M. P. இஸரேல் குமரு பிள்ளை
இவர்கள் நன்முயற்சியின்படி
சென்னையம்பதி:

அ. தாவீதுபிள்ளை யவர்களால்,
எழுதப்பட்டது.

30-8-12.

V. K. PRESS, CHINTADRIPET, MADRAS.

திப்பாவணி [illegible]ண்ஸ்ரீ பண்ராகம்.

திருவளர்ப் புவியெலா மனுதினத் தமைத்திடுங்
    திருபரன் றனையீன் றுங் கனியாளே
உருவள ரதிசுடர் கதிரையே அருணிறை
    யுவகையாய்த் திருமேனி யுடுத்தாளே
அருவளர் தவிதிறை குலமணி யெனவுய
    ரணிபரம் புகழ்ப்பணி நிறைந்தாளே
மருவளர் தழைமலர்ப் பெருவளம் நிறைபுகழ்
    வளர்வேளாங் கணியரும் பதியாளே. (1)

திகழ்ப்பன்னீ ருடுதனைச் சிரசினில்முடித்திந்த
    ஜெகமேதெய் வாசினை யுடையாளே
துகளெனும் பவமற புவனமே யருளுற
    சுகவடி மதியினை மிதித்தாளே
சுகந்தரு மரிமரி யெனகிளி வழைத்திட
    துயர்க்களைந் ததனைமே மீட்டாளே
தகதக வெனுந்தங்க விமானத்தி லெழுந்தருள்
    தழைவேளாங் கணியரும் பதியாளே. (2)

மாசிலா தவமணி யெனுஞ்சூசைத் திருமுனி
    மணம்புரி வரந்தனை யடைந்தாளே
நேசமா யிடைச்சிபொன் னடிதனில் மலரிடும்
    நிகழ்த்தரும் பணிக்கருட் புரிந்தாளே
தாசனுந் தவீதுசொற் கிரங்கியே அருள்தரத்
    தடையிலை மரியாயி கொடுப்பாளே
வாசமா மலரடிப் பணிகின்றே னனந்தமாய்
    மகிழ்வேளாங் கணியரும் பதியாளே. (3)

காப்பு வெண்பா.

அவ்வுலகு மிவ்வுலகு மர்ச்சித் தடிபணியுஞ்
செவ்விதிரு வாரோச்ய மாமரியாய்க்—கவ்வையிலாக்
கொண்டவிழா நாட்சிறப்பைக் கும்மியாய்ப் பாடவே
கண்ணிமலர் பொற்பதமே காப்பு. [ளாங்

கும்மி.

ஆடுமயில்புரு அன்னங் குயில்பாடும்
அழகுறுஞ் செந்நெற் சோலைகளும்
நீடும்வேளாங் கண்ணி ஆரோக்யமாதாவின்
நீதியாலயமே தோழர்களே. (1)

மாமரி மாமரி மாமரியே தெய்வ
மாமரியாரோக்ய மாமரியே
மாமரியென்றாலோ பாவந்துலைந்திடும்
வந்துபாருமென்றன் தோழர்களே. (2)

வந்தாலென்னப் பலன் வந்துவேளாங்கண்ணி
மாதாவின்மேல் பக்தி வைத்தவர்க்கே
வந்தபிணிவினை தீர்வதல்லாற் கேட்ட
வரமுங் கிடைக்குந் தோழர்களே. (3)

அன்னைக் குருசுடன் பொற்கொடி வாவென்று
அழைக்கும் விதமாய் ஆடுதுபார்
முன்னமிதைக் கண்டோ பக்தியொரேநிலை
யுள்ளத்தில் வைப்போமென் தோழர்களே. (4)

தெய்வவியாகுல மாதாவின்சந்நிதி
திவ்யமகனை கரத்திலேந்தி
மெய்ஞ்ஞான நோக்கமே பாவிகட்காகவே
மேனோக்கி வேண்டுறாள் தோழர்களே. (5)

நேர்மை யானவலங் காரப்பீடத்திலே
நெய்விளக்கு தேங்காய் வத்திகளும்
சோர்வின்றி சோதிப்ரகாசமாய்த் தோணுது
சொல்ல வென்னாலாமோ தோழர்களே. (6)

அம்மன் மரியாயி ஆலயஞ் சுற்றியே
அவாவர்க் கொண்ட பிரார்த்தனைப் போல்
செம்மை பபபக்தி யுள்ளத்தில் வைத்துமே
சேவித்து வாராரென் தோழர்களே. (7)

தேன்வளர் சோலைக் கழுகுதெங்கு பலா
செழுநகர் வேளாங் கண்ணியிலே
வான்வள ராரோக்ய மாதாவி னலயம்
மாண்பாய் விளங்குதென் தோழர்களே. (8)

பீடலங் காரத்தைப் பார்க்கக்கண் கூசுது
பீடுறுமே தங்கபொன் மயமாய்
தேடரும்பட்டு நவரத்ன ஜோடினை
செப்பத் தரமோஎன் தோழர்களே. (9)

துங்கமணி ஞான பீடத்திலே வத்தி
சொல்லக் கணக்கில்லை சோதியுடன்
எங்கும் ப்ரகாசமாய்த் தோணகுருமார்கள்
ஏத்தித் தொழுகின்றார் தோழர்களே. (10)

ஏத்தித்தொழுகின்றார் சீஷர் தூபமுடன்
எண்ணரும் பிரார்த்தனைக் கொண்டுபலர்
பார்த்திரா மேல்நிலை பரமேஸ்வரியை
பத்தியாய்ப் போற்றுரார் தோழர்களே. (11)

மாண்பாய் விளங்கிடும் ஆரோக்யமாதாவின்
மகிமை யாராலுஞ் சொல்லப் போமோ
காண்பதற்கிட்டாப் பரஞ்சுதனை யீன்றுங்
கற்பழியாக் கன்னி தோழர்களே (12)

ஆதவனை மேனிபூண்டவளாஞ் சேசு
ஆண்டவனைக் கரங் கொண்டவளாஞ்
சீதமதியை மிதித்தவளாஞ் சுக்கை
சென்னி முடித்தாளாந் தோழர்களே. (13)

பத்தியாயிடைச்சி பாதமலர் தன்னில்
பரிவாய் மலரிட்டுப் பணிய
சித்தமிரங்கி யவட்கு தோன்றியருள்
செய்த தயாபரி தோழர்களே. (14)

கொடிய துஷ்டையா மெஜிபத்தூரில்வாழ்
கோதை மரியாளை சீர்திருத்தி
நீடவருள் செய்த புண்யகுணத்தையான்
நிகழ்த்தக் கூடுமோ தோழர்களே. (15)

வன்னகனடித்தக் கிள்ளையது அம்மா
மரிமரி யென்று தானழைக்க
நன்னய மாய்கார்த் ததுபோல நம்பினால்
நம்மையுங் காப்பாளே தோழர்களே. (16)

புட்பவிமானத் தெழுந்து அவரவர்
போற்றியே கேட்கும் ஞானவரங்கள்
கட்புலனைந்துக்கு மெட்டாப்பரலோக
காரணி தருவாள் தோழர்களே. (17)

வானவர்க்குமெட்டா தேவதாய்செய்திடும்
வல்லமை மேவும் புதுமைகளை
நானறிந்துசொல்ல வாகுமோ திருநாள்
நற்சிறப்பைப் பாருந் தோழர்களே. (18)

தகதகெனபொன் வெள்ளிப் பொருள்களும்
சாற்றும்வத்தி தென்னங் கண்ணுகளும்
அகமகிழ்ந்து பொறுத்தனைக்காய்த் தந்தார்
அதனைப் பாருமென் தோழர்களே. (19)

ஆலயஞ்சுற்றி பசுந்தென்னந் தோப்புகள்
அலர்ந்த பூமலர் பொய்கையிடை
சாலகோயிற்புறம் துரைமார்களன்ன
தானங் கொடுக்கிறார் தோழர்களே. (20)

சந்நிதிபின்புறஞ் சத்திரமே நேரு
சகலர்க்கு நன்மை செய்யவொரு
பன்னுமாஸ்பத்திரி கலெக்டர் வசிக்கும்
பாங்கான விடுதி தோழர்களே. (21)

தென்னங் கள்ளுக்கடை அதோதெரியுது
செப்புமோர் சாராயக் கடையிது
என்ன அழகான பித்தளை பாத்ரங்கள்
இந்தக்கடைபாருந் தோழர்களே. (22)

சீனிகற்கண்டுடன் லட்டு ஜாலேபிகள்
சிறந்தபால்கோவா மிட்டாய்க்கடை
வானமிர்தம்போல பாகஞ் செய்தமிட்டாய்
வாங்கி புசிப்போமென் தோழர்களே. (23)

ஆலயமுன்னணி சத்திரமே கடை
அ[illegible]லை தோகைமார் பூணும்பல
நீலபச்சை பம்பாய் வளையல்மின்னிடும்
நேர்த்தியைப் பாருமென் தோழர்களே. (24)

சந்தைக்கடைவீதி வேண்டும் பலபொருள்
தப்பாமற் கிட்டுமே சந்நிதிமுன்
சுந்த்ர மலர்வத்தி சாம்ப்ராணி கடைசீர்
சொல்லத் தரமோஎன் தோழர்களே. (25)

பார்க்கப் பார்க்கவிந்தத் திருநாள் சிங்காரம்
பலவுண்டு சொல்ல நேரமில்லை
தேர்வள ராரோக்ய மரியாசீர்ப்பெற்றுச்
சீக்கிரம் போவேமென் தோழர்களே. (26)

பூவணிப்பாவறுசீர்பண்ராகம்.

தேனவிழும் பூமணமே கமழுந்திரு
வேளாநகர் சிறந்தபூவே
வானுலகும் பூவுலகும் வழுத்தரிய
புகழ்ப்பாடி வணங்கும்பூவே
கானமர்ந்து திருமலரை மிதித்தெழுமெய்க்
காக்ஷியருள் கருணைபூவே
வானகபூ ஞானமர்ப்பூ வளர்லில்லி
ரோசாபூ மகிமைபூவே.

சந்திரனுஞ் சூரியனுந் தாரகையும்
பூண்டுலகை யாளும்பூவே
கந்தமலர் நிகர்ப்பொன்னுந் திருச்சுதனைத்
தானீன்றுங் கன்னிபூவே
வந்தடியார்க் கேட்டிடுநல் வரமளித்தே
அருட்புரியு மன்னிபூவே
சுந்தரஞ்சேர் வேளாநகர் ஆரோக்ய
மரியாயி சுகுணபூவே.

வாழி தேவாரம்.

திருவளர் பரமன்வாழி திகழ்சூசை
முனிவர் வாழி
மருவளர் திருவாரோக்ய மரியாயி
திருநாள் வாழி
உருவளர் அர்ச்சிய சிஷ்டர் உயர்மறை
குருக்கள் வாழி
அருவளர் கற்றோர்க் கேட்டோர்
அவனியே வாழி மன்னே.